REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5| சென்னை: புரட்டாசி 9உ புதன் (25—9—57) ★ வெளியீடு: புரட்டாசி 10உ வியாழன் (26—9—57) [இதழ் 88

இங்கிலாந்தில் 'புளு'!

லண்டன், செப். 25—

இங்கிலாந்தில் நச்சுக் காய்ச்சல் எனப்படும் 'இன்புளுயன்சா' பரவியுள்ளதாம். 24 பேர் இறந்துவிட்டனராம்.

33,000 குழந்தைகள் பள்ளிகளுக்குச் செல்லவில்லையாம்.

இதேபோன்று இத்தாலி நாட்டு ரோம் நகரத்தில் 6,00,000 பேருக்கும், அமெரிக்காவில் 1,500 கல்லூரி மாணவர்களுக்கும் இந்தக் காய்ச்சல் பரவியுள்ளது என்று செய்திகள் கிடைத்துள்ளன.

தமிழ் காக்க--தாயகத்தின் மானம் காக்க

வீரர்களே காணிக்கை தாரீர்

அகமும் புறமும் அளித்தோம் நாம்-அன்று மொழியும் வாழவழியும் அறிந்திலர் வடவர்

இன்று அவர்தம் மொழிக்கு இங்கு ஆதிக்கமா?

இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அண்ணு முழக்கம்

எங்கள் தமிழ், இந்தியைவிட எல்லா வகையிலும் சிறப்பானது என்பதை எடுத்துரைக்க அல்ல, தமிழ் வட்நாட்டு மொழிகளைவிட எந்தெந்த வகையில் சிறந்தது என்பதை ஆராய்வதற்கல்ல, இந்தி எதிர்ப்பு மாநாடு.

இந்தி ஆதிக்கத்தை எப்படி முறியடிப்பது? இந்தி ஆதிக்கத்தை எவ்வாறு அழிந்து ஒழிப்பது? அதற்காக நடைபெறும் போராட்டத்தில் நமது காணிக்கை என்ன? என்பதைச்சிந்தித்து, காணிக்கைகளைச் சேர்ப்பதற்குத் தான் இங்கே இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெறுகிறது என்று நமது அண்ணு அவர்கள், திருவண்ணுமலை இந்தி எதிர்ப்பு மாநாட்டில் முழக்கமிட்டார்கள்.

வரலாற்றுச்சிறப்புக்குரிய அண்ணு அவர்களின் அந்த முழக்கம் கீழே தரப்படுகிறது:—

★

"வட ஆற்காடு மாவட்டம், தமிழகத்திலே இந்த நாளில் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி நிலைமையை முதல்முதல் தமிழகத்திற்கு அறிவிக்கின்ற முறையில் இன்றையத் தினம் இந்தி எதிர்ப்பு மாநாட்டை நடத்துகின்றது. வ. ஆ. மாவட்டத்திலேயுள்ள நண்பர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாநாட்டை இங்கே நடத்துகின்ற நேரத்தில் முதல் நாள் நடைபெறுகின்ற மாநாடு இந்தி எதிர்ப்பு மாநாடாக அமைய வேண்டும் என்ற சூழ்நிலை நாட்டிலே இன்று உருவாகியிருக்கிறது.

"அந்தச் சூழ்நிலையை நல்லபடி உணர்ந்து நம்முடைய நண்பர்கள் முதல் நாள் மாநாட்டை 'இந்தி எதிர்ப்பு மாநாடு' என்று நடத்தி அதன் மூலமாக நீண்ட நாளாக நம்மிடையே தொடர்பு கொண்டு இருந்தவரும், இடையிலே தனது துறையிலே பணியாற்றிக் கொண்டிருந்தவருமான எனது செழுதகை நண்பர்-துறவிகளுடைய இலக்கணத்துக்கு ஒரு நடமாடும் சான்றாக இருந்து கொண்டிருப்பவர்— காவிகளெல்லாம் கறைபட்ட காலத்திலே, காவி உடையிலேயும் நல்ல உள்ளத்துடன் நடமாட முடியும் என்பதை நாட்டுக்கு எடுத்துக் காட்டியவர் — மறத்தமிழ்க்குடியிலே பிறந்தவர்—மறந்தும் தமிழுக்கு இழுக்குத் தேடுபவர்களை எந்தத் திக்கிலிருந்தாலும் அவர்களைச் சாடத்தக்க வகையிலே மனவலிமை படைத்தவர்—அருணகிரி அடிகள் அவர்களை இன்றைய மாநாட்டிலே நம் முன்னே கொண்டுவந்து நிறுத்த ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. வ. ஆ. மாவட்டத்திற்குத்தான் இந்த நல்ல வாய்ப்பு கிடைத்தது; வ. ஆ. மாவட்டந்தான் அந்த வாய்ப்பைத் தரவேண்டும். ஏனென்றால் வ. ஆ. மாவட்டம் தி. மு. கழகத்திற்கு அவ்வப்போது கைகொடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றது. அதற்கு முக்கியமான காரணம், வ. ஆ. மாவட்டத்தின் காரணமாகத்தான் தி. மு. கழகமே துவக்கப்பட்டது. வ. ஆ. மாவட்டம் பெரியாருக்குப் பெண் கொடுக்காமலிருந்திருந்தால், தி. மு. கழகமே தோன்றியிருக்காது. ஆகையினாலே வ. ஆ. மாவட்டம் நெருக்கடியை உண்டுபண்ணுவதிலும் தலைசிறந்தது; ஏற்படுகின்ற நெருக்கடியைத் தீர்த்து வைப்பதற்குப் பரிகாரம் தேடுவதிலும் முன்னணியிலிருப்பது. அப்படிப்பட்ட வ. ஆ. மாவட்டத்திலே நடைபெறுகின்ற இந்த மாநாட்டில் இந்தி எதிர்ப்பு பற்றி ஒரு தனி மாநாடாக நடத்துவது மிகப் பொருத்தமுடையது.

"இன்றைய மாநாட்டிலே காலை முதற்கொண்டு நடைபெற்றுவருகின்ற நிகழ்ச்சிகளை நீங்களெல்லாம் ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தீர்கள் — கேட்டுக்கொண்டு வந்தீர்கள். 1937-ம் ஆண்டிலே—அந்த நாட்களிலே இந்தி எதிர்ப்பு இயக்கத்திலே ஈடுபட்டிருந்த என்போன்றவர்களுடைய மனமெல்லாம் 1937-ம் ஆண்டுக் காலத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டது; எங்களுடைய மனக்கண் முன்னாலே தொண்டைமண்டலம் பள்ளிக்கூடம் காட்சியளித்தது; இந்தியலாஜிகல் பள்ளிக்கூடம் காட்சியளித்தது; குதிரைப்பட்டாளம் காட்சியளித்தது; சிறைச்சாலைகளிலே தரப்பட்ட மண் கலயங்களும் காட்சியளித்தன. எங்களுடைய மனக்கண் முன்னாலே அந்த நேரத்தில் மூன்று துறவிகள், தி.மு. கழகம் துவக்கப்படாத காலத்திலேயே—இந்தி எதிர்ப்பு இயக்கத்தைத் திறம்பட நடத்துவதற்கு பக்கத்திலே நின்றார்கள். அவர்களிலே தலைசிறந்தவராக நம்முடைய நண்பர் அருணகிரி அடிகள் அவர்கள் அந்த நேரத்தில் நின்றார்கள். அவர்களுடைய வெண்கலக்குரல் முதுமையின் காரணமாக இன்றையத்தினம் கொஞ்சம் தட்டுப்பட்டிருக்கின்றது. அவருடைய வீர உணர்ச்சி முதுமையின் காரணமாகக் குறைந்துவிடவுமில்லை; குலைந்து விடவுமில்லை.

"அவருடைய சொல்லையும், அந்த சொல்லோடு கலந்துவந்த வீரமுழக்கத்தையும், வீர முழக்கத்துக்குத் துணைநின்ற வீரப் பாடல்களையும் சென்னை நகரத்திலே எல்லா மூலைமுடுக்களிலேயும் கேட்டிருக்கிறார்கள்.

"என்ன மடமை, இந்த இராசகோபாலாச்சாரிக்கு" — என்று இந்த தெருக்கோடியிலே இவர் பாடல்களைக் கிளப்பினால் மறு தெருக்கோடியிலே உள்ளவர்கள் வருவார்கள். அப்பொழுதெல்லாம் ஒலிபெருக்கிகள் இல்லாத காலம்.

"ஒலிபெருக்கிகள் அபூர்வமாக வைக்கப்பட்ட காலத்தில், தெருத்தெருவாக அந்தக் கூட்டங்களை நடத்துவதற்கு அருணகிரி அடிகள் இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்ட நேரத்தில், அவர்கள் ஒரு மடத்திலே மிக நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருந்தவர்கள். அந்த மடத்திலே அவர்களுக்கு ஒரு குறையுமில்லை. அவரை அண்டிப் பிழைப்பவர்களும், அவரை அடிவருடக் கூடியவர்களும், அவரை 'அடிகளே' என்று அன்புடன் அழைக்கக் கூடியவர்களும், அவருடைய மதவுரைகளைக் கேட்டு மகிழத் தக்கவர்களும், ஏராளமாக அந்த மடத்திலே இருந்தும், மடத்திற்கு வெளிப்புறத்திலே, தமிழுக்கு ஒரு ஊறு நேரிடுகிறது—தமிழ் மொழிக்கு இழுக்குவருகின்றது என்று கேள்விப்பட்டவுடன் மடத்திலே இருக்கின்ற காரியத்தைப் பற்றியும் கவலைப்படாமல் காவி உடையோடு, நம்மோடு கை கோர்த்துக்கொண்டு, தமிழகத்திலே இந்தி எதிர்ப்பு இயக்கத்தை மிகத் திறம்பட நடத்தியவர்கள் அருணகிரி அடிகள் ஆவார்கள். அவர்கள் இந்த மாநாட்டுக்குத் தலைமைவகிக்க வேண்டுமென்று நண்பர் நடராசன் மூலம் மெத்த விரும்பி வேண்டிக் கேட்டுக்கொண்டேன். இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்த வேண்டுமென்று நண்பர்கள் விரும்பிய நேரத்தில், அதற்குத் தலைமைவகிப்பதற்கு யாரை அழைக்கலாம்; யாராவது தமிழ்ப் புலவரை அழைக்கலாமா? என்று முதலிலே எண்ணினோம்.

"அதற்குப் பிறகு தமிழ்ப் பெரும் புலவர்கள், தமிழிலே தான் திறமைபெற்றிருக்கக் கூடுமே தவிர, தாய்த் திருநாட்டு விடுதலைக்கு ஏற்ற ஆற்றல் அவர்களுக்கிருந்தாலும், அவர்கள் ஈடுபட்டிருக்கும் அலுவல்கள் அவர்களுக்கு அச்சத்தையூட்டும் என்ற காரணத்தினாலே, அவர்களைத் தேடாமல் இருந்தோம். அப்படியானால், பெரிய அரசியல் தலைவர்கள், நம் இயக்கத்தோடு இரண்டறக் கலந்து இல்லாவிட்டாலும் கொஞ்சம் நெருங்கி வரக்கூடியவர்கள், ஓரத்திலே இருந்தாலும் நம்மிடத்திலே கொஞ்சம் உள்ள அன்பு படைத்தவர்கள், அப்படிப்பட்டவர்கள் யாரையாவது அழைத்துத் தலைமை வகிக்கச் சொல்லலாமா என்று நண்பர்கள் என்னிடத்திலே சொன்னார்கள். எனக்கு ஒரே ஒரு பெயர்தான் நினைவுக்கு வந்தது; அந்தப் பெயரை நண்பர்களிடத்திலே சொன்னேன். 'நான் சொன்னதாக நீங்கள்போய் சுவாமி அருணகிரிநாதரை அழையுங்கள்; அவர் தான் இந்த நேரத்திற்குத் தலைமை வகிக்க மிகப் பொருத்தமானவர்' என்று நான் சொன்னேன்.

"நான் அப்படிச் சொன்னதற்குக் காரணம், இந்தி எதிர்ப்பு மாநாடு இன்றையத்தினம் நாம் நடத்தினோம். நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இந்தி மொழியின் இயலாத தன்மையினையும், தமிழின் தொன்மையினையும், அழகுற எடுத்துச் சொன்னார்கள். வேறு பல நண்பர்கள் இந்தி தமிழகத்திலே நுழைக்கப்பட்டால் நேருகிற பேராபத்தை எடுத்துச் சொன்னார்கள். இவைகளை மட்டும் அலசி ஆராய்ந்துவிட்டு இந்த மாநாடு முடிவடைந்துவிடப் போவதில்லை. இந்த மாநாடு மொழிப் பிரச்சினையை ஆராய்வதற்கு மட்டும்கூட்டப்பட்டதுமல்ல: இந்த மாநாடு தமிழ் மொழி சிலாக்கியமானது என்று எடுத்துச் சொல்லுவதுமல்ல. தமிழ் எவ்வளவு சிலாக்கியமானது என்பதைத் தமிழனிடத்திலே தமிழன் எடுத்துச்சொல்லுவது அவமானத்தின் அறிகுறி என்று நான் கருதுகிறேன்.

"தமிழ் மொழி ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயிருந்து எத்தனையோ பெரிய படையெடுப்புக்களையும், எத்தனையோ பெரிய தாக்குதல்களையும், எத்தனையோ பெரிய தூற்றுதல்களையும் தாங்கிக் கொண்டு இன்றையத் தினமும் தன்னிகரற்ற நிலையிலே இருக்கிறதென்றால், அந்த மொழி நமக்கு உகந்தமொழிதான்—நமக்கு ஏற்றமொழிதான்-தலை சிறந்த மொழிதான். பாரிலே உள்ள பல மொழிகளிலே தமிழ் மொழி தலைசிறந்த மொழி என்று தமிழன் தமிழர்களுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருப்பது உண்மையிலேயே சில நேரங்களுக்கு வேண்டுமானால் பொருந்தும். காதல் பேசும் நேரத்திலே கணவன் தன் மனைவியை அருகிலே வைத்துக்கொண்டு 'உன்னைவிட அழகியை உலகத்திலே நான் கண்டதே இல்லை' எனக் கொஞ்சுவான். இப்படிக் கொஞ்சத் தேவையில்லையென்றாலும், கொஞ்சுவதாலே இலாபம் கிடைக்கும் என்பதாலே கொஞ்சுகின்றான். அதே முறையிலே தமிழ் மொழியை இன்றையத் தினம் கொஞ்சுகிறோமேயொழிய அதற்கு வாதங்கள் தேவையில்லை. 'என்னுடைய மொழியைவிடச் சிறந்த மொழி உலகத்திலே வேறொன்றில்லை' என்று எடுத்துச் சொல்லுகின்ற கடமை, எஸ்கிமோ நாட்டுக்காரனுக்கு இருக்கின்றது. பின்லாந்து நாட்டுக்காரனுக்கு இருக்கின்றது. வளமற்ற மொழிபடைத்தவனானாலும் அவனுக்குச் செம்மொழி தாய் மொழிதான்.

"நமக்குக் கிடைத்திருக்கின்ற தாய் மொழி பிற மொழிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில் பிற மொழியாளர்களெல்லாம் பார்த்து இவ்வளவு எழிலுள்ள மொழியா உங்களுடையது? இவ்வளவு ஏற்றம்படைத்த இலக்கியமா உங்களிடத்தில் உள்ளது? இவ்வளவு சிறந்த இலக்கணத்தையா நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்? ஈராயிரம் ஆண்டுக்காலமாகவா இந்த மொழி சிதையாமல் சீர்குலையாமல் இருந்து வருகின்றது? என்று ஆவலுடன் சிலரும் ஆயாசத்துடன் பலரும் பொறுமையோடு சிலரும், பொச்சரிப்பாலே பலரும் கேட்கத்தக்க நல்ல நிலையிலேதான் தமிழ்மொழி இருக்கின்றது. ஆகையினாலே தமிழ் மொழிக்காக வாதாடுவதற்காக தமிழர் மன்றத்திலே தமிழன் பேசவில்லை. ஆனால் தமிழ் மொழி இருக்கின்ற நேரத்தில் பிற மொழியை நுழைக்கின்ற பேதமை, தமிழ்மொழி இருக்கின்ற நேரத்தில் பிற மொழியை ஆதிக்கமொழியாக்குகின்ற அக்கிரமம்—இவைகளைக் கண்டித்து அந்த அக்கிரமத்தை நீக்குவதற்கு வழி என்ன என்று

(4-ம் பக்கம் பார்க்க)

குடகு நாட்டின் மகிமை?

குமரிகளின் கோட்டம் என்கிறார் பண்டிதர்

மெர்காரா, செப். 24—

குடகு நாட்டின் மகிமை என்ன? பண்டிதர் கூறுவதைக் கேளுங்கள்.

குடகு, இந்தியாவின் இதர பாகங்களைவிட மூன்றுவிதத்தில் பிரக்யாதி பெற்றதாம்.

ஒன்று, குடகு நாடு, அருமையான இராணுவ தளபதிகளைத் தருகிறதாம்.

இரண்டாவதாக, குடகில், சிறந்த காப்பி கிடைக்கிறதாம்.

மூன்றாவதாக, பண்டிதர் குறிப்பிட்டிருப்பது, குடகில், நேர்த்தியான பெண்மணிகளும் இருக்கிறார்களாம்.

முன்னாள் இராணுவ தளபதி, ஜெனரல் கரியப்பாவின் அழைப்பிற்கிணங்கி, குடகு வந்த பண்டிதர் கூட்டம் ஒன்றில் பேசும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டு, கூடியிருந்தோரை சிரிப்பில் ஆழ்த்தினாராம்.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 25—9—57 புதன்

திருவண்ணாமலை முடிவுகள்

வடஆற்காடு மாவட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கட்டிக் காத்துவரும் வீரர்கள் கடந்த செப்டம்பர் 21, 22-ந் தேதிகளில் திருவண்ணாமலையில் கூடி, தாயகத்தை எதிர்நோக்கியிருக்கும் பிரதான பிரச்சினைகளைப்பற்றிப் பொதுவாகவும், வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த பிரச்சினைகளைப்பற்றிக் குறிப்பாகவும், கழகத் தலைவர்களின் முன்னிலையில் தீர்க்கமாக விவாதித்து, அரிய தீர்மானங்களை உருவாக்கித் தந்திருப்பதின் மூலம் கழகத்தின் வளர்ச்சியில் தங்களுக்குள்ள சிறப்பான பங்கினைத் திறம்பட நிறைவேற்றியுள்ளனர்.

வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள், தென்னகத்தைத் தங்களின் நிரந்தர ஆதிக்கபுரியாக்கிக்கொள்ளும சதியான 'ஏக இந்தியா' என்ற அரசியல் அமைப்பை நிலைநிறுத்தும் பொருட்டு, இந்தித் திணிப்பைத் தீவிரப்படுத்தி வருகின்றனர். இந்த இந்திப் பிரச்சினைதான், தாயகத்தை இன்று எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளில் எல்லாம் தலையாயது; இதன் முக்கியத்துவத்தை மிகைப்படுத்துவதற்கில்லை. இதனை உணர்ந்துதான் வ. ஆ. மாவட்ட கழக வீரர்கள், இந்தப் பிரச்சினைக்குரிய முக்கியத்துவத்தைத் தருவதற்காகவும், இந்தி எதிர்ப்பு மாநாடு என்ற பெயரில் பிரச்சினையைத் தனிமைப்படுத்தி முதல் நாள், இந்தப் பிரச்சினையின் ஆழத்தையும், இந்தித் திணிப்பினால் ஏற்படக்கூடிய கொடிய விளைவுகளையும் ஆராய்ந்துள்ளனர்; முடிவாக மேற்கொண்டுள்ள தீர்மானம் மிக விளக்கமானது.

இரண்டாம் நாள் நடைபெற்ற கழக மாநாட்டில் இன்று நாட்டை எதிர்நோக்கியுள்ள எல்லாப் பிரச்சினைகளும் கவனிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டிருக்கின்றன.

நம்மை விட்டுப் பிரிந்த அருமந்த தோழர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்த மாநாட்டினர், அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கழகத்திற்கு வெற்றி தேடித் தந்த மக்களைப் பாராட்டி தங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஒன்றே குலம் என்ற உயர் இலட்சியத்திற்காக இடையறாது பணிபுரியும் கழகம், அண்மையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் தோன்றியுள்ள சாதி வெறி கண்டு ஆழ்ந்த கவலை கொண்டிருப்பதையும், இந்த வெறியைத் தணிக்க உடனடியாக மாநில சர்க்கார் செய்ய வேண்டிய பணி குறித்தும், மாநாட்டினர் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

ஏழை எளிய மக்களின் துயரங்கள், நாளுக்கு நாள் பெருகி வரும் காரணங்களை விவாதித்த மாநாட்டினர், டெல்லிப் பேரரசின் வரிக் கொடுமைகளையும், உணவு போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை ஏறவிட்டு வேடிக்கை பார்க்கும் போக்கினையும் வன்மையாகக் கண்டித்திருப்பதுடன், விலைவாசிகளைக் கட்டுப்படுத்தவும், ஏழை எளிய மக்கள் மீது புதிதாகச் சுமத்தப்பட்டுள்ள வரிப் பளுவை இறக்க வேண்டுமெனவும் மாநாடு கேட்டுக்கொண்டிருக்கிறது.

பேராசை கொண்ட டெல்லிப் பெரியவர்கள், ஐந்தாண்டுத் திட்டங்களில், தொடர்ந்து தென்னாட்டிற்கு உரிய பங்கினைத் தராமல் வஞ்சகம் புரிவதைக் கண்டித்துள்ள மாநாடு, தென்னாட்டினை வளப்படுத்தும் வகையில், திட்டத்தினைத் திருத்தி அமைக்க வேண்டும் என்றும் கோரியிருக்கிறது.

நைத்தறிக்குப் பாதுகாப்புத் தருவோம் என்று தேர்தல் நேரத்தில் ஆசை வார்த்தைகள் காட்டிவிட்டு, ஆட்சிபீடத்தில் அமர்ந்ததும் பாதுகாப்புக் கருவதற்கான திட்டத்திற்கு விரோதமாகக் கைகாட்டும் காங்கிரசாரின் போக்கிற்கு திருவண்ணாமலை மாநாடு சாட்டையடி தந்திருக்கிறது. நெசவாளரின் வாழ்வுக்கு நிரந்தரமான பாதுகாப்புத் தரும் திட்டம் ஒன்றினை அரசியலார் உடனடியாகச் செயல்படுத்தவேண்டும் எனவும் மாநாடு வலியுறுத்தியுள்ளது.

தமிழகத்திற்கு, 'தமிழ் நாடு' என்ற இயற்பெயரிட்டழைக்க வேண்டும் என்ற தமிழ் மக்களின் இயற்கையான விருப்பத்தை, எளிதில் நிறைவேற்ற முடியும் என்ற நிலையிருந்தும் அவ்விருப்பத்தை ஏற்க மறுத்து வரும் காங்கிரஸ் ஆளவந்தாரின் போக்கு, மக்களின் பொறுமையைச் சோதிப்பதாகும் என, மாநாடு எச்சரித்திருக்கிறது; பெயரிடக்கூடாது என்பதற்கான காரண ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் அமைச்சர்களுக்கு இந்த எச்சரிக்கை, விழிப்புணர்வைத் தரவேண்டும்.

கோட்டை விடுவதில் தனித்திறமை காட்டிவரும் மாநில ஆட்சியாளர், படாஸ்கர் தீர்ப்பு என்ற பெயரில், தமிழகத்திற்குச் சொந்தமான பகுதிகளை இழந்துவிடாமல் முன்னெச்சரிக்கையுடன் இருந்து, மக்களின் கருத்திற்கொப்ப காரியமாற்ற வேண்டுமென, மாநாடு குரல் கொடுத்திருக்கிறது. செவிடர்களாயிருந்து விடாமல் அமைச்சரவையினர், குரலுக்குச் செவிசாய்க்க வேண்டும்.

மற்றும், நங்கவரம் அறப்போரில் ஈடுபட்டு வெற்றிகண்ட உழவர் பெருமக்கள்மீது போர் வெற்றிகரமாக முடிந்த பின்னரும் சர்க்கார் வழக்குகள் தொடுத்து அவர்களைத் தண்டிக்க முயற்சிப்பது, அநியாயமானது என்பதால், வழக்குகளைத் திரும்பப்பெற வேண்டும் என்றும், பீடித் தொழிலாளருக்கான பாதுகாப்புச் சட்டம் வேண்டுமென்று வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன. அத்துடன், சாத்தனூர் நீர்த்தேக்கப் பிரதேசத்தில் சர்க்கரை ஆலை வேண்டுமென்றும், பாலாற்றுக்கு நீர் கிடைக்க வழிசெய்ய வேண்டுமென்றும், குடியேற்றம் பட்டுத் தொழிற்சாலை மூடிக்கிடப்பதை திறக்க வேண்டுமெனவும், ஓராசிரியர்களின் பரிதாபகரமான நிலைக்குப் பரிகாரம் தேடவேண்டுமென்றும் மாநாடு கோரியுள்ளது.

இந்தத் தீர்மானங்கள் எல்லாம், சம்பிரதாயத்திற்காக நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் என்று, கருத்துக்குருடானவர்களைத் தவிர வேறெவரும் கூறத் துணியார்கள். எனவே, டெல்லி சர்க்காரும், மாநில ஆட்சியாளரும், சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் கவனம் செலுத்தி, தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

கனவிலும் நனவிலும்!

மைசூர், செப். 22—

டில்லிப் பெரியவர்களுக்குக் கனவிலும் நனவிலும், வடநாடு-தென்னாடு பிரச்சினைதான் கண்முன் வருகிறது; இணையவே முடியாத இந்த இரு துருவங்களையும் இணைத்துப் பாலம் அமைத்துவிடவே, 'ஏக இந்தியா'வை நீடித்துவிடவே முழுமுச்சுடன் முயற்சிக்கிறார்கள்.

இங்கு, மாணவர்களுக்கான நீச்சல் குளத்தைத் திறந்துவைக்குமாறு பண்டித நேருவைக் கேட்டார்கள். அந்தச் சமயத்தில் குழுமியிருந்த மாணவர்களிடை பேசும் போதுகூட பண்டிதருக்கு, வடக்கும்—தெற்கும்தான் நினைவுக்கு வருகின்றன.

"இளைஞர்களே, மாணவர்களே! வடநாடு—தென்னாடு என்று பிரித்துப்பேசாதீர்கள்; நாம் அனைவரும் ஒரு பெரும் குடும்பம் போன்று ஒரு பெரிய நாட்டில் வாழ்வதாகவே எண்ணுங்கள். வடக்கே இமாலயத்தின் அடிவாரத்தில் வாழ்ந்தாலும், தெற்கே மைசூரில் வாழ்ந்தாலும், நாம் அனைவரும் ஒரு பெரிய குடும்பத்தின் உறுப்பினர்கள் என்று எண்ணவேண்டும்,"

என்றும் பண்டிதர் கூறினாராம்!

நிலவுடைமை விவரம்

கவர்னர் அவசரச் சட்டம்

ஐதராபாத், செப். 23—

ஆந்திர மாநிலத்தில் 20 ஏக்கருக்கு அதிகமாக நிலம் வைத்திருக்கும் நிலச்சுவன்தார்கள், தங்களது நிலவுடைமைகள் பற்றி சரியான தகவல்களை 90 நாட்களுக்குள் தர வேண்டும் என்று ஆந்திர கவர்னர் ஓர் அவசரச் சட்டம் பிரகடனப் படுத்தியுள்ளார்.

விவரம் தெரிவிக்கத் தவறுபவர்களுக்கு ரூ. 500-வரை அபராதம் விதிக்கப்படுமென்றும், அதன் பிறகும் தவறு செய்யப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ரூ. 100 வீதம் அபராதம் விதிக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

காங்கிரஸ்காரர்களின் அடுத்த வேலை

'குறைத்து உண்' இயக்கம் நடத்துவர்

புதுடில்லி, செப். 23—

மக்கள் அதிகமாக உண்ணத் துவங்கிவிட்டனராம்! உணவை மிகுதியாக்க வேண்டுமாம்! இதற்காக எல்லோரும் குறைவாக உண்ணவேண்டுமாம்!

உடல்நலமின்றி வரும் நோயாளிகளில் 75 சதவிகிதத்தினர், அதிகம் தின்று அஜீரணம் கொண்டவர்கள் என்று வங்க முதலமைச்சர் டாக்டர் பி. சி. ராய் தெரிவித்துள்ளார்.

நாட்டில் 'குறைத்து உண்' என்ற புதிய இயக்கம் நடத்த வேண்டியதின் அவசியத்தைப் பற்றி தேசிய வளர்ச்சிக் குழுவில் ஆராய்ந்துள்ளனர்.

10 ஆண்டுகளுக்குள் கட்டாய இலவசக் கல்வியாம்!

மாநில கல்வி மந்திரிகள் மாநாட்டில் முடிவு

புதுடில்லி, செப். 21—

'குறைந்தபட்சம் 1966-ம் ஆண்டில்—அதாவது, மூன்றும் திட்ட கால முடிவிலாவது, 6 முதல் 11 வயதுக்குட்பட்டவர்களுக்கு இலவசக் கட்டாயக் கல்வி நாடு முழுதும் அளிக்கவேண்டும்' என்று திட்டக் குழுவின் கல்வித் திட்டக் கிளை செய்திருந்த சிபாரிசுகளை, மாநில கல்வி மந்திரிகள் மாநாடு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

இன்று முடிவுற்ற இந்த மாநாடு, இந்தச் சிபாரிசுகளை ஏற்றுக்கொள்வது பற்றித் தீர்மானம் ஒன்று நிறைவேற்றிய அதே நேரத்தில், இந்த இலட்சியத்தை அடைவதற்காக, பல வழிமுறைகளையும் கண்டறிய நடவடிக்கை எடுப்பது எனவும் தீர்மானித்திருக்கிறது.

மூன்றாண்டுப் பட்டப் படிப்பு

இப்போது பரவலாக நிலவி வரும் இரண்டாண்டுப் பட்டப் படிப்பிற்குப் பதிலாக மூன்றாண்டுப் பட்டப் படிப்பு என்ற புதிய திட்டத்திற்கும் பல மாநில கல்வி மந்திரிகளும் ஆதரவு தெரிவித்திருக்கின்றனர். இந்தப் புதிய திட்டம், பல்கலைக் கழகக் கல்வி முறையில் ஒரு முன்னேற்றம் காண மிக அவசியம் என்றும் கருத்தறிவித்திருக்கின்றனர்.

இந்த முக்கியமான கல்விச் சீர்திருத்தத்திற்கு தேஷ்முக் குழுவின் சிபாரிசுகளை மாநாடு அங்கீகரித்திருப்பதாகவும் தெரியவருகிறது. பல்கலைக் கழக மானியக் குழுவும், மத்திய சர்க்காரும் இந்தச் சீர்திருத்தத்திற்குத் தேவையான நிதியை ஒதுக்கித் தருவார்கள் என்று நம்புவதாகவும் மாநில மந்திரிகள் கருத்தறிவித்திருக்கின்றனர்.

பிராவிடண்ட் நிதிக்குப்பதிலாக பென்ஷன் முறை

10 லட்சம் இரயில்வே ஊழியருக்கு புதிய ஏற்பாடு

புதுடில்லி, செப். 23—

டில்லி சர்க்கார் அண்மையில் மேற்கொண்ட முடிவின்படி, இப்போதுள்ள 'பிராவிடண்ட்' நிதிக்குப் பதிலாக 'பென்ஷன்' முறையை வைத்துக்கொள்வது பற்றி, சுமார் 10 இலட்சம் இரயில்வே ஊழியருக்கு, விருப்பம் போல் நடந்துகொள்ள அனுமதி தரப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இன்னும் சில நாட்களில் இது பற்றி அதிகாரபூர்வமான அறிவிப்புகள்வரும் என்று தெரியவருகிறது.

சர்க்கார் இதுபற்றி இரயில்வே தொழிலாளர் சங்கங்களிடம் விவாதித்து கருத்தறிந்ததாகவும், பிராவிடண்ட் நிதிக்குப் பதிலாக பென்ஷன் முறையை அவர்கள் வரவேற்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

கோவா விடுதலை பிரச்சினை

சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணை

ஹேக், செப். 23—

"இந்தியாவில் போர்ச்சுகலின் காலனிகள் விஷயத்தில், இந்தியா ஒரு சமாதானபூர்வமான பரிகாரத்தைத்தான் விரும்புகிறது.

"இராணுவ நடவடிக்கை எடுத்தால் இரண்டே நாளில் அந்த போர்ச்சுகீசியப் பகுதிகள், இந்தியாவின் பகுதிகளாகிவிடும் என்று கூறப்பட்டிருக்கிறது; ஆனால், இந்தியா அத்தகைய வழியில் பரிகாரம் தேடவிரும்பவில்லை"

என்று, சர்வதேச நீதிமன்றத்தில் இந்திய அட்டர்னி-ஜெனரலான எம். சி. செதல்வாட், இந்தியாவின் நிலையை எடுத்து விளக்கியிருக்கிறார்.

'உற்பத்தியை 40 சதவிகிதமே அதிகரிக்க முடியும்'

மத்திய உணவு ஆராய்ச்சி நிலைய மதிப்பீடு

மைசூர், செப். 23—

பண்டித நேரு, மைசூர் மாநில நிதி அமைச்சருடன் மத்திய உணவு ஆராய்ச்சி நிலையத்திற்கு வந்து சுமார் 1½ மணி நேரம் பார்வையிட்டுள்ளார்.

அவர் அங்கு சென்றபோது நிலையத்தின் விஞ்ஞானிகளுடன் கலந்துபேசியுள்ளார்.

நிலையத்தின் நெறியாளர் டாக்டர் சுப்பிரமணியம் நாட்டின் உற்பத்தியை 30-லிருந்து 40 சதவிகிதம்வரை அதிகரிக்கச் செய்ய இன்னும் குறைந்தது 30 அல்லது 40 ஆண்டுகள் பிடிக்கும் என்று கூறியுள்ளார்.

இதைக் கேட்ட பண்டித நேரு, சில ஆண்டுகளுக்கு முன்னர் வெளிநாடுகளிலுள்ள பாங்கிகள், இந்தியாவின் உற்பத்தி குறைந்தது 300—400 மடங்கு அதிகரிக்க வேண்டும் என்று கூறியிருந்ததை நினைவுபடுத்தி, நாட்டின் பொருளாதாரம் சீர்பட நவீன முறையில் விவசாயம் பெருகப் படுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஐ. நா. சபை சரிவர

இயங்காததற்குக் காரணம்?

பீகிங், செப். 20—

இந்திய உபகண்டத்தின் துணைத் தலைவர் டாக்டர் இராதாகிருட்டிணன் சீனா சென்றுள்ளார்; அவர் அங்கு பீகிங்கில் பேசுகையில், ஐக்கியநாடுகள் சபையில் எல்லா நாடுகளும் இடம்பெற இயலாத நிலைமைதான் அச்சபை சரிவர செயல்படாததற்குக் காரணம் என்றும், அவ்வப்போது பிரச்சினைகளை ஆராய்ந்து முடிவு காண்பதில் ஈடுபடாமல் ஆதிக்கக் கூட்டுகள் செயல்படுவது மற்றொரு காரணம் என்றும் தெரிவித்துள்ளார்.

"இன்று நாடுகள் சுதந்தரம் பெற மக்கள் போராடவேண்டியுள்ளது; இந்த நிலை மாறவேண்டும். அமைதியான முறையில் நாடுகளுக்கு விடுதலை தேடித் தருவதற்கான வழிவகைகளை ஐ. நா. சபையே காண வேண்டும்" என்று தான் கருதுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

குந்தா, நெய்வேலித் திட்டங்கள்

'திட்டமிட்டப்படி நடந்தேறும்'

நிதி அமைச்சர் உறுதிமொழி

சென்னை, செப். 23—

"இரண்டாவது திட்டத்தின் கட்டங்களை மாற்றியமைப்பதால் குந்தா, நெய்வேலித் திட்டங்கள் போன்ற சென்னை மாநிலத்தின் பெரிய திட்டங்கள் எதுவும் பாதிக்கப்படமாட்டாது. திட்டமிட்டபடி அவை நடந்தேறும்"

என்று, டில்லியில் நடைபெற்ற மாநில அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு சென்னை திரும்பிய நிதி அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

'கொழும்புத் திட்டத்தின்கீழ் ரூ. 3 கோடி உதவி நிச்சயம் கிடைக்கும்' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வீட்டுக்கு வீடு 'சாமி மாடம்' இருப்பதுபோல் 'புத்தக மாடம்' இருப்பதில்லையே!

'வடமொழி வரவால் தமிழ் வளர்ச்சி தடைப்பட்டது'

சேலம்—குகை நூல்நிலையத் திறப்பு விழாவில் பேராசிரியர் அன்பழகன்

சேலம், செப். 20—

சேலம் குகையில் 28—29-வது வட்ட தி. மு. க. சார்பில் தி. மு க. நூல் நிலையம் ஒன்றைப் பேராசிரியர் க. அன்பழகன் எம். எல். ஏ. அவர்கள் 8—9—57 இரவு துவக்கிவைத்தார்; விழாவிற்குத் தோழர் ஆர். கே. செயராமன் தலைமை வகித்தார்; தோழர் பி. கோபாலகிருட்டினன் எல்லோரையும் வரவேற்ருர்.

சேலம் மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம், சேலம் நகர தி. மு. க. செயலாளர் தோழர் இ. ஆர். கிருட்டினன், மற்றும் பலரும் பேசினர்.

தி. மு. க. சொற்பயிற்சி மன்ற நூல் நிலையத்தைப் பேராசிரியர் அன்பழகன் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்த நூல்நிலையத் திறப்பு விழாவின்போது கலைவாணர் என். எஸ். கே. அவர்களைப்பற்றிய நினைவு வருகிறது. நம்மைவிட்டு, கலைவாணர் பிரிந்ததானது நம்மை ஆருத் துயரத்தில் ஆழ்த்திவிட்டது. இம்மாதிரி நூல்நிலையங்களுக்குக் கலைவாணர் பெரிதும் நன்கொடைகள் அளித்துள்ளார். ஆகவே, கலைவாணர் நம்மைவிட்டுப் பிரிந்தபோதிலும் அவரை நாம் மறக்க முடியாது.

"தி. மு. கழகம் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்துவருகிறது. நாட்டில் உள்ள மக்களில் பெரும்பாலோர் கல்வியறிவு இல்லாதவர்களாக இருக்கிருர்கள். ஏழை மக்கள்தான் அதிகமாக நம் நாட்டில் இருக்கிருர்கள். அதிகப் புத்தகங்களை வாங்கிப் படிக்கும் அளவில் மக்களுக்குப் பொருளாதார வசதி இல்லை. ஆகவே, இம்மாதிரி இலவசமான நூல்நிலையங்கள் நாட்டில் ஏராளமாக ஏற்படவேண்டும். பல புத்தகங்களைப் படித்துத் தங்களுக்கு உள்ள சந்தேகங்களை நீக்கிக்கொள்ள வேண்டும்.

"அண்ணுவின் புத்தகங்களில் பல அரிய கருத்துக்கள் உள்ளன. ஆகையால், படிக்கத் தெரியாதவர்கள்கூட இந்தமாதிரி நூல்நிலையங்களுக்கு வந்து அண்ணுவின் புத்தகங்களை பிறரைப் படிக்கச் சொல்லியாவது அண்ணுவின் கருத்துக்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். அண்ணுவின் புத்தகங்களைப் படிப்பதால் நாட்டில் புது எழுச்சி உண்டாகும்.

"பல வீடுகளில் 'சாமி மாடம்' (சாமிவைத்துப் பூசை செய்யும் அலமாரிகள்) தனியாக இருக்கும்; அறிவைக் கொடுக்கும் புத்தகங்களுக்காக அலமாரிகளைக் கட்டமாட்டார்கள். இந்த நிலை மாறவேண்டும்.

"தமிழின் வளர்ச்சிக்கு வடமொழி தடையாக இருந்தது. நம் வரலாற்றை நாம் மறந்தோம். கோவில்களில் வடமொழியில் அர்ச்சனை செய்யவேண்டிய அவசியமென்ன? தமிழில் ஏன் அர்ச்சனை செய்யக்கூடாது? சமஸ்கிருதம் செத்த மொழியாகும்; தமிழ் உயிருள்ள மொழி. ஆண்டவனை அவரவர் தாய்மொழியில்தான் வணங்கவேண்டும் என கவி இரவீந்திரநாத் தாகூர் கூறியுள்ளார். ஆகவே, தமிழை ஏற்றுக்கொள்ளாத தெய்வம் நமக்கு எதற்கு? கோவில்களில் தமிழில்தான் அர்ச்சனை நடைபெறவேண்டும்.

"தமிழர்களுக்கு மிகச் சிறந்த நூலாக விளங்குவது திருக்குறளாகும். திருக்குறளை மக்கள் எல்லோரும் படிக்கவேண்டும். சங்க இலக்கிய நூல்களும் இம்மாதிரி நூல்நிலையங்களில் இடம்பெற வேண்டும்.

"நல்ல சமுதாயத்தை ஏற்படுத்தவும், மூடப் பழக்கவழக்கங்களைவிட்டொழிக்கவும் இம்மாதிரி நூல்நிலையங்களிலுள்ள நூல்களை மக்கள் படித்து அறிவை வளர்ச்சி செய்துகொள்ளவேண்டும்.' (ந-நி)

*

கோபியில் அன்பழகன்

கோபி தி. மு. கழகச் சார்பில், 8—9—57 மாலை 7 மணிக்குப் பெரியார் திடலில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தோழர் எஸ். அப்பாவு அவர்களும், தோழர் க. அன்பரசு அவர்களும் சிறிதுநேரம் பேசியபின்னர், பேராசிரியர் க. அன்பழகன் எம். எல். ஏ. அவர்கள், சட்டசபையில் தி. மு. க. உறுப்பினர்கள் செய்துவரும் பணிகள் குறித்து அரிய விரிவுரை நிகழ்த்தினர்.

கூட்டத் துவக்கத்தில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

இந்தி கட்டாயமாகத் திணிக்கப்பட்டால்......

'மீண்டும் கொடி எரிப்புப் போர் துவங்கும்'

சேலத்தில் பெரியார் அறிவிப்பு

திராவிட கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் 79-வது பிறந்த தின விழாவை முன்னிட்டு 21-ந் தேதி மாலை சேலத்தில் நடந்த திராவிட கழக பொதுக்கூட்டம் ஒன்றில் பெரியாருக்கு சேலம் நகர திராவிட கழகச் சார்பில் ரூ. 40 எடையுள்ள 19½ அங்குலமுள்ள வெள்ளி வாள் ஒன்று பரிசாக அளிக்கப்பட்டது. மற்றும் பல பரிசுகளும், கைத்தறி ஆடைகளும் அளிக்கப்பட்டன.

பெரியார் ஈ. வெ. ரா.-வுக்கு அளிக்கப்பட்ட அந்த வாளில் 'தந்தை பெரியாரின் 79-வது பிறந்ததின விழா அன்பளிப்பு—சேலம் நகர திராவிட கழகம்' என்று எழுதப்பட்டுள்ளது.

பெரியார் பதிலளித்துப் பேசியபின், கேள்விக்குப் பதிலளிக்கையில், தானும் ராஜாஜியும் சில தினங்களுக்குமுன் சந்தித்ததாக 'நவ இந்தியா' செய்தித் தாளில் வந்த செய்தியைத் தான் பார்க்கவில்லை என்றும், ராஜாஜியைத் தான் சந்தித்துப் பேசவில்லை என்றும் கூறினர்.

இந்தியைக் கட்டாயமாகப் புகுத்த நடவடிக்கை எடுத்தால் ஒத்திவைக்கப்பட்டிருக்கும் கொடி எரிப்புப் போராட்டத்தை மீண்டும் துவங்கப்போவதாகவும் பெரியார் கூறினர். (ந. நி.)

நெய்யப்படாத துணி!

நிபுணர்கள் கருத்து

அமெரிக்கத் தயாரிப்பாளர்கள் இப்பொழுது நெய்யப்படாத துணிகளைத் தயாரிக்கின்றனர்.

பிளாஸ்டிக் பசை மூலம் பருத்தி அல்லது கம்பளி இழைகளை ஒட்டவைக்கின்றனர். இந்த ஒட்டவைக்கும் முறை ஏற்கனவே, கைத்தொழிலில் உபயோகத்தில் இருந்துவந்துள்ளது.

இப்பொழுது நெய்யப்படும் துணிக்குப் பதிலாக நெய்யப்படாத துணிவரும் நாள் இப்போதைக்கு இல்லை என்றும், ஆனல் இந்த அபிவிருத்தி துணித் துறையில் முன்னேற்றத்தைக் குறிக்கும் ஒரு அம்சம் என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

மலேயாவில் தமிழர்கள் படும் அவதி

சேலத்தில் டி. கே. எஸ். குழுவினர் விளக்கம்

சேலம், செப். 22—

மலேயா சென்று திரும்பிவந்த டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகக் குழுவினருக்கு செவ்வாய்ப்பேட்டை தமிழரசுக்கழகத்தினரால் 22-ந் தேதியன்று ஒரு வரவேற்பு வழங்கப்பட்டது.

வரவேற்புக்குப் பதிலளிக்கையில் நடிகர் டி. என். சிவதாணு கூறியதாவது:—

"மலேயா, சிலோன் போன்ற வெளிநாடுகளில் தமிழர்கள் அதிகம் இருக்கிருர்கள். இங்குள்ள இந்திய ஸ்தானிகர்கள் வட இந்தியர்களாக இருப்பதால் அவர்களுக்குத் தமிழர்களைப் பற்றி அதிகம் தெரிவதில்லை. ஆகவே தமிழர்கள் அதிகம் வாழும் மலேயா, சிலோன் போன்ற வெளிநாடுகளுக்குத் தமிழர்களையே இந்திய அரசாங்கத்தார் ஸ்தானிகர்களாக நியமிக்க வேண்டும். தமிழர்கள் ஸ்தானிகர்களாக நியமிக்கப்பட்டால்தான் அங்குள்ள தமிழர்களின் நலன்களைப் பற்றி இந்திய ஸ்தானிகர்கள் கவனிக்க முடியும்.

"மலேயாவில் காய்கறிகளுக்கு அதிகக் கிராக்கி உள்ளது. சென்னை மாநிலத்தில் காய்கறிகளையும், மற்றப் பொருள்களையும் அதிகமாக உற்பத்தி செய்து மலேயா போன்ற நாடுகளுக்கு அனுப்பினல் நம் மாகாணத்தின் வருவாயும் அதிகரிக்கும். இம்மாதிரியான காரியங்களுக்கு இந்திய அரசாங்கம் தடையாக இருக்கக்கூடாது. எடுத்ததற்கெல்லாம் இந்திய அரசாங்கம் மாகாண அரசாங்கங்களுக்குத் தடையாக இருந்தால் எப்படி மாகாண அரசாங்கங்கள் முன்னேற முடியும்?"

தமிழ் நாட்டில் குறிப்பாக சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பல தமிழர்கள் இங்கு வேலை கிடைக்காததால் மலேயாவுக்குத் தோட்டத் தொழிலாளர்களாகச் சென்றுள்ளார்கள் என்றும், இந்த அவல நிலை என்று மாறும் என்றும் டி. கே. பகவதி குறிப்பிட்டார்.

டி. கே. சண்முகம், கருப்பையா ஆகியோரும் பேசினர்.

சுப்பிரமணிய பாரதியின் உருவம் கொண்ட தபால் பில்லைகளை வெளியிடுமாறும், சுப்பிரமணிய பாரதியின் பிறந்ததின விழாவிற்கு விடுமுறை விடுமாறும், வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு சென்னை கோட்டையில் உருவச் சிலை அமைக்குமாறும் மாநில, மத்திய அரசாங்கங்களைக் கேட்டுக் கொண்டு தீர்மானங்கள் நிறைவேறின.

படாஸ்கரின் முதல் அறிக்கையை அப்படியே ஒப்புக்கொள்ளுமாறும், படாஸ்கரின் இரண்டாவது அறிக்கையை நிறுத்திவைக்குமாறும் கேட்டுக்கொண்டு மற்ருெரு தீர்மானம் நிறைவேறியது. (ந. நி.)

'நண்பர்களாக வாழ்வோம்'

மலேயா-சிங்கப்பூர் இணைப்புபற்றி மலேயா பிரதமர்

சிங்கப்பூர்—

"சண்டையிட்டுக்கொண்டு ஒரு குடும்பத்தினராய் இருப்பதைவிட, அடுத்த நாட்டு நண்பர்களாய் இருப்பது நல்லது" என்று மலேயா பிரதமர், தனக்களிக்கப்பட்ட தேநீர் விழாவில், மலேயா—சிங்கப்பூர் இணைப்புப் பற்றி கருத்தறிவித்துள்ளார்.

சிங்கப்பூர் குடிமக்கள் இனி சுதந்தரமாக மலேயாவுக்கு செல்ல முடியாதென்றும், மலேயாவுக்குத் தனி வாெெலி நிலையம் ஏற்படுமென்றும், சிங்கப்பூரிலுள்ள மலேயா கப்பல் படை வெட்டன்ஹாமுக்கு மாற்றப்படுமென்றும் அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் தமிழ் பல்கலைக் கழகம்!

தூதுக் குழுவின் கோரிக்கையை ஏற்க மறுக்கிருர் பண்டாரநாயகா

கொழும்பு, செப். 23—

இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா, 'இலங்கையில் ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவவேண்டும்' என்ற கோரிக்கையை ஏற்க மறுத்திருக்கிருர்.

தமிழ் பேசும் மக்களின் சார்பில் தூதுக்குழு ஒன்று பிரதமரைச் சந்தித்து, தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று நிறுவவேண்டியதின் அவசியத்தையும், அதன் அமைப்பும் சட்டதிட்டங்களும் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினர் என்று தெரியவருகிறது. பிரதமரிடம் மகஜர் ஒன்றும் அவர்கள் தந்ததாகத் தெரியவருகிறது.

இதற்குப் பதிலளித்த பிரதமர் பண்டா, 'தமிழ் மக்களுக்கென ஒரு தனிப்பல்கலைக் கழகம் நிறுவவேண்டும் என்பதை இப்போது நினைத்துப் பார்ப்பதற்குக்கூட இல்லை. இப்போது நாட்டில் ஒற்றுமையும், இணக்கமான ஒரு சூழ்நிலையும் உருவாக்குவது பற்றியே சர்க்கார் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறது' என்று குறிப்பிட்டாராம்.

தமிழ் மாணவர்கள் தமிழ் மூலமே பயில வேண்டுமென விரும்பினல் இப்போதுள்ள பல்கலைக் கழகத்திலேயே பயிலலாம் என்றும் அவர் கூறியதாகத் தெரியவருகிறது.

ஒன்றுக்கு மேற்பட்ட பல்கலைக் கழகம் நிறுவுவது பற்றி, தான் சீக்கிரமே நியமிக்கவிருக்கும் ஒரு கமிஷன் ஆராய்ந்து கூறும் என்று கூறியதாகத் தெரியவருகிறது.

'இப்போதைய வாழ்க்கைத்தரப்புள்ளி சரியானதல்ல'

தொழில் அமைச்சர் ஒப்பம்

சென்னை, செப். 23—

"பல ஆண்டுகளுக்கு முன்னர் தொழிலாளருக்காகத் தயாரிக்கப்பட்ட வாழ்க்கைத்தரப் புள்ளியைக் கொண்டே இப்போதைய வாழ்க்கைத் தரம் நிர்ணயிக்கப்படுகிறது. இப்போது பயன்படுத்தப்படும் வாழ்க்கைத்தரப் புள்ளி தெரிவியல், புரிவியல் எதற்குமே பயன்படவில்லை; வேறு வழியில்லாத காரணத்தினல் பழைய முறையே நீடிக்கப்படுகிறது. நடுத்தர வகுப்பினர்களுக்கான வாழ்க்கைத்தரப் புள்ளியைச் சரிவர நிர்ணயிக்க நாம் உடனே தக்க வழிகளை வகுக்க வேண்டும்"

என்று, சென்னை மாநில தொழில் அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் சென்னையில் நடைபெற்ற பாங்கி ஊழியர் சங்கக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

பரம்பிக்குளம் தண்ணீர் தகராறு

கேரள மக்களின் கருத்தறிந்த பின்னரே பேச்சுவார்த்தை என்கிருர் மந்திரி

பரம்பிக்குளம் தண்ணீர் பற்றி, சென்னை—கேரள மாநிலங்களுக்கிடையே அக்டோபர் இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறலாம் எனத் தெரியவருகிறது.

கேரள நீர்ப்பாசன மந்திரி கிருஷ்ணய்யர் இதுபற்றி திருவனந்தபுரத்தில் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சென்னை நிதி மந்திரி சுப்பிரமணியம் புதுடில்லியில் என்னைச் சந்தித்தபோது, பரம்பிக்குளம் தண்ணீர் பற்றிப் பேச வேண்டும் எனக் கேட்டார். ஆனல் நான், இதுபற்றி நமது மாநில மக்களின் கருத்தினை, அரசியல் கட்சிகள் மூலம் அறிந்த பின்னரே சர்க்கார் எதுவும் செய்ய முடியும் என்பதால், அவகாசம் வேண்டுமெனக் கேட்டேன். அக்டோபர் பின் பகுதியில் பேச்சுவார்த்தை நடத்தலாம் எனக் கூறினேன்.

"இந்தச் சிக்கல் பற்றிய எல்லா விவரங்களையும், அரசியல் கட்சித் தலைவர்களின் மாநாடு ஒன்றைக் கூட்டி அங்கு வெளியிட சர்க்கார் உத்தேசித்திருக்கிறது."

'அடிப்படைக் காரணங்களை ஆராய வேண்டும்'

சாதிச் சண்டையை அகற்ற பண்டித நேருவின் யோசனை

சென்னை, செப். 24—

பண்டித நேரு தனது மைசூர் மாநில சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு டில்லி செல்லும் வழியில் ஐதராபாத் புறப்பட்டார் என்றும், அங்கு அவர் இராமநாதபுரம் பகுதிகளில் நடைபெறும் சாதிச் சண்டையைப் பற்றி அறிந்து வருந்தினர் என்றும், இந்தச் சாதிச் சண்டைக்கான அடிப்படைக் காரணத்தைக் கண்டறிந்து அதை அகற்றவேண்டும் என்று கேட்டுக்கொண்டதாகவும் தெரியவருகிறது.

பண்டிதருடன் சென்ற இந்திய உள்நாட்டு அமைச்சர் பந்த், மாநில அரசாங்கம் தக்க தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதாகவும் தெரியவருகிறது.

சென்னை மாநில அமைச்சரவை, நிலைமையைப் பற்றி ஆராயக் கூடியதாகவும், அமைச்சர்களான பக்தவத்சலம், சுப்பிரமணியம் நேரில் சென்று நிலைமையை சரிப்படுத்த முனைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

'வானொலியில் விளம்பரம் செய்வது நல்லதே'

டாக்டர்ஏ.எல். முதலியார்கருத்து

சென்னை, செப். 24—

"வானொலியை விளம்பரத்திற்குப் பயன்படுத்துவதில் தவறில்லை; இன்று உலகில் அமெரிக்கா முன்னேறியிருப்பதற்குக் காரணம் அவர்களது விளம்பரத் திறமைதான். விளம்பரம் செய்வதென்பது நல்ல வாணிபத்திற்கு அடிகோலுவதாகும். ஒன்றை விட்டு மற்ருென்றைப் பிரிக்க முடியாது.

"வானொலியில் விளம்பரம் கூடாது என்பது அர்த்தமற்றது. இப்போது மட்டும் என்ன? அரசியல் தலைவர்களையும், பாடகிகளையும் விளம்பரப்படுத்தவில்லையா?"

என்று, சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் அவர்கள் இந்திய வர்த்தகர் சபையின் ஓவிய விளம்பரக் கண்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

கொடுத்த வாக்கு நினைவிருக்கிறது!

புதுடில்லி, செப். 23—

'1946-ல் அதிகார மாற்றம் அமைதியாக நடைபெற முன்ஞள் மன்னர்களுக்கு வாக்களிக்கப்பட்டதை மீறி 'செல்வ வரி' விதிக்க விரும்பவில்லை' என்று பண்டித நேரு தெரிவித்துள்ளார்.

'செல்வ வரி மூலம் ரூ. 5 கோடி வருமானம் கிடைக்கலாம்; இதற்காக சொன்னதை மீறக்கூடாது; இது பெரிதல்ல; கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டும்' என்றும் பண்டிதர் கூறியுள்ளார்.

அண்ணா தலைமையில் ‘கட்டபொம்மன்’ நாடகம்

சிவாஜி-கணேசன் நடிப்புத்திறனுக்கு பாராட்டு

சென்னை, செப் 25—

பாரத் பைன் ஆர்ட்ஸ் சார்பில், **23—9—57** மாலை **6-30** மணிக்கு, சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற சிவாஜி நாடக மன்றத்தாரின் ‘கட்டபொம்மன்’ நாடகத்துக்கு **அண்ணா** அவர்கள் தலைமை வகித்தார்கள்.

பாரத் பைன் ஆர்ட்ஸ் சார்பில் செயலாளர் கல்யாணசுந்தரமும், சிவாஜி நாடக மன்றச் சார்பில் சிவாஜி-கணேசனும் அண்ணா அவர்களை வரவேற்று, மாலை அணிவித்தனர்.

அண்ணா அவர்கள், பேசுகையில், கட்டபொம்மனாக நடித்த சிவாஜி-கணேசனும் மற்ற நடிகர்களும் மிகத் திறம்பட நடித்ததாகவும், நாடக வசனங்களும், காட்சி அமைப்புகளும், உடை அலங்காரங்களும் உயர்ந்த முறையில் அமைக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்கள்.

அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது :—

“சிவாஜி-கணேசன், இன்றையத்தினம் நடிப்புத் துறையிலே நல்ல திறமையும் புகழும் பெற்று விளங்குவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். அவர் இந்த அளவுக்கு உயருவார் என்று எனக்கு முன்பே தெரியும். அவர் சிவாஜி-கணேசனாக மாறிய பின்னரே நாட்டு மக்கள் அவரை அறிவார்கள்; சாதாரண கணேசனாக இருந்தபோதே, அவர் சிவாஜி-கணேசனாக மாறுவார் என்பதை நான் அறிந்திருந்தேன்.

“அவர் நாடகத் துறையில் மலர்ந்த மலராக இருக்கும் பொழுதுதான் நாட்டவர் காண்கின்றனர்; அரும்பாக இருந்த காலத்திலேயே அவரை நான் அறிவேன்.

“சிவாஜி கணேசன் கட்டபொம்மன் பாத்திரத்தை ஏற்று மிகச் சிறப்பான முறையிலே இன்று நடித்துக்காட்டினார். அவர் உண்மையிலேயே கலைநுட்பத்தையறிந்து நடிக்கக்கூடியவர்; வீணையின் எந்த நரம்பைத் தடவினால் என்ன ஒலி எழும் என்பதையறிந்து இனிய நாதத்தை எழுப்புவதுபோல், பாத்திரத்தின் தன்மையறிந்து பாத்திரத்துக்கு உயிரூட்டமளித்து நடிக்கக்கூடியவர் கணேசன்.

“கணேசனின் நடிப்புத் திறனைக் காட்டக்கூடிய அளவுக்கும், தமிழ்ப் பண்பை ஆங்காங்கு புகுத்தியும், நல்லமுறையில் வசனம் அமைத்துத் தந்திருக்கும் நண்பர் சக்தி-கிருஷ்ணசாமியையும் பாராட்டுகிறேன்.

“கணேசன் இந்த அளவுக்கு உயர்ந்திருப்பதற்குக் காரணம், இந்த நாடகத்திலே அடிக்கடி குறிப்பிட்டார்களே முருகன், ஜக்கம்மா என்றெல்லாம்; அந்த முருகன் அருளோ, ஜக்கம்மா அருளோ அல்ல. தன் சொந்த உழைப்பினாலும், முயற்சியினாலுமே அவர் இத்தகைய திறமையையும் புகழையும் பெறமுடிந்தது.

“இறுதியாக நான் கணேசனை என் மனமார வாழ்த்துகிறேன். அவருடைய புகழ் மேலும் வளர வேண்டும்; வளருவார் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

“‘தம்பி கணேசா, நீ நன்றாக வளர்ந்திருக்கிறாய், இன்னும் வளருவாய். நன்றாக வளரு, நீ எங்கிருந்தாலும் வளரு’ என்று கூறி வாழ்த்துகிறேன்.”

சிவாஜி கணேசன் அண்ணா அவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், சாதாரண கணேசனாக இருந்த தன்னை சிவாஜி கணேசனாக மாற்றியது. அண்ணா அவர்கள்தான் என்றும், தானும் தன்குடும்பத்தாரும் அண்ணா அவர்களுக்கும் குடும்பத்தார்க்கும் என்றென்றும் கடமைப்பட்டிருப்பதாகவும், இதைத்தான் அமெரிக்க வானொலி நிகழ்ச்சியில் பேசுகையில்கூட (வாய்ஸ் ஆப் அமெரிக்கா) குறிப்பிட்டிருப்பதாகவும் கூறினார்.

சக்தி கிருஷ்ணசாமி பேசுகையில் நாடகத்தில் தமிழ்ப் பண்பு ஆங்காங்கே மிளிர்வதற்கும் அண்ணா அவர்கள் நாட்டில் ஊட்டிவரும் உணர்ச்சியின் விளைவுதான் என்று கூறி தன்னைப் பாராட்டிய அண்ணா அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். (ந—ந)

கழகக் கூட்டம்

★

அனுமந்தக்குடி

ஆற்றுத்திடலில்

27—9—57 மாலை 6 மணிக்கு

தலைவர்: கோ. சண்முகம்

பேசுவோர் :

எம். எஸ். மணி
நெடுமாறன்
சோம. வேலுச்சாமி
இராம. வெள்ளையன்
குரு. இதயமணி
அழ. சுப்பிரமணியன்

ஈ. வெ. கி. சம்பத்

சுற்றுப்பயணம்

செப். 26 : நாமகிரிப்பேட்டை
27 : நாமக்கல்
28 : வேலூர் (சேலம்)
29 : மதுரை
30 : ஆனைமலை
அக். 6 : திருச்சி
7 : திருவையாறு, வரகூர்
8 : திருத்துறைப்பூண்டி
9 : சீர்காழி
10 : மாயூரம்
13 : சென்னை

திருவண்ணாமலையில் அண்ணா முழக்கம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி

உங்களைக் கேட்க இந்த மாநாடு கூட்டப்பட்டிருக்கின்றது. தமிழ் மொழியிலே அகத்திலே என்ன இருக்கின்றது? நிறத்திலே என்ன இருக்கின்றது?—என்பதை நாவலர் நெடுஞ்செழியன் அருமையாக நமக்குச் சொல்லிவிடுவார். தமிழ்மொழியிலே பெயர்கள் எப்படியெல்லாம் மாற்றப்பட்டன? என்பதைக் கூற ‘ஊரும்பேரும்’ எழுதிய பேராசிரியர் சேதுப்பிள்ளை போதும். தமிழ்மொழியிலேயுள்ள இலக்கணச் செறிவுகள் என்னென்ன?—இதற்கு பாரதியார் ஒருவர் போதும் ஆனால், அவைகளுக்காக மட்டுமல்ல; இங்கே இந்த மாநாட்டிலே நாம் கூடியிருப்பது.

“இந்த மாநாட்டிலே எடுக்கின்ற முடிவினை, இந்த மாநாட்டிலே இந்தியை எதிர்த்தாக வேண்டும் என்று நாம் நிறைவேற்றியிருக்கின்ற தீர்மானத்திற்கு உயிரூட்டம் தரவேண்டுமானால், நீங்களெல்லோரும் 1937-க்கு வருவதற்கு சித்தமாக இருக்கின்றீர்களா? என்று கேட்பதற்கு மாநாடே தவிர, சிலப்பதிகாரத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கல்ல; கம்பராமாயணத்தினுடைய சுவைகளை எடுத்துச் சொல்வதற்கல்ல; அகத்திலேயும் புறத்திலேயும் உள்ள அணிகளையும் அழகுகளையும் எடுத்து விளக்குவதற்கு அல்ல; அவைகளுக்குத் தமிழ்ப் பெரும் புலவர்கள் போதும்; வகுப்பறைகள் போதும்.

“வெட்டவெளியிலே கொட்டகை போட்டு வீதி தவறாமல் தோரணங்கள் கட்டி, சிற்றூர்களிலிருந்தெல்லாம் சிங்கநிகர்த்த காளைகள் சாரைசாரையாக வந்து இந்த மாமன்றத்தில் கூடியிருப்பதற்குக் காரணம் இந்தி மொழியைவிட தமிழ் மொழி சிறந்தது என்று வாதாடுவதற்கல்ல. தமிழகத்திலே இந்தி மொழி திணிக்கப்பட்டால் அதை எந்த வழியிலே அழித்துக்கட்டுவது; எந்த முறையிலே ஒழித்துக்கட்டுவது; அதற்கு நம்முடைய காணிக்கை என்ன? என்று சிந்தித்து அவரவர்கள் தங்கள் காணிக்கைகளைச் சேர்ப்பிப்பதற்காக இங்கு கூடியிருக்கிறார்களே தவிர வெறும் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக அல்ல.

“1937-ல் அருணகிரிநாதர் அவர்கள் சொன்னபடி நான் வாலிபனாக இருந்தேன்; என்னோடு இன்றையத்தினம் வாலிபர்களாக உள்ளவர்களில் பலபேர் அன்று தத்திவிளையாடும் பிள்ளைப் பருவத்திலிருந்தார்கள். ஆனால் இன்றைய தினம், 1937-லே கிடைத்திராத ஆதரவு நமக்குக் கிடைத்திருக்கிறது. 37-லே நமக்குக் கிடைக்காத பெருந்துணைகள் 57-ல் கிடைத்திருக்கின்றன. 37-ல் வாலிபனாக இருந்த அண்ணாதுரை 57-ல் நடுத்தர வயதினனாக ஆகியிருக்கின்றான். அன்று பிள்ளைகளாயிருந்தவர்கள் இன்று வாலிபர்களாகியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அளவுக்கு தனிப்பட்ட ஆட்கள் வளர்ந்திருப்பது மாத்திரம் அல்ல; தமிழருடைய உணர்ச்சியும் அந்த அளவுக்கு நன்றாக வளர்ந்திருக்கின்றது. தமிழர் வளர்ந்திருப்பது தெரிந்தும் வடநாட்டார் இன்றையத் தினம் வம்புக்கு வருகிறார்கள் என்றால், உங்களையும் என்னையும் நம்மைப் படைத்த தமிழ் நாட்டையும், தமிழ் நாட்டுக்கு உயிர்நாடியாக இருக்கின்ற தமிழ் மொழியையும் துச்சமென்று அவர்கள் கருதுகின்றார்கள். நீங்கள் எவ்வளவு வளர்ந்தாலென்ன? கவலையில்லை; 2,000 கிளைக் கழகங்களா?—வைத்துக்கொள்ளுங்கள்; 2 லட்சம் உறுப்பினர்களா?—இருக்கட்டுமே; நாள் தவறாமல் பொதுக் கூட்டங்களா? — சேர்வீப்படுகிறோம்; ஊர் தவறாமல் மாநாடா?—பார்த்துக்கொண்டிருக்கிறோம்; உங்களுடைய இயக்கத்திலே பத்திரிகைகள் பல இருக்கின்றனவா?—இருக்கட்டும் — இருக்கட்டும்; உங்கள் இயக்கத்திலே அழகாகப் பலர் பேசுகின்றார்களா? பேசட்டும்—பேசட்டும்; ஆனால் எங்கள் ஆதிக்கம் நிறைவேறும் என்று அங்கே உள்ளவர் சொல்லுகிறார்கள்.

“இங்கே நாம் ஆயிரமாயிரமாகக் கூடியிருக்கிறோம். நாம் வளர்ச்சியடைந்திருக்கிற இந்த நேரத்திலும் நம்மை உண்மையிலேயே அடக்கி ஆளவேண்டுமென்று கருதுகின்றவர்கள், ஆதிக்கம் செலுத்தக்கூடியவர்கள் இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் இருக்கின்ற திக்குநோக்கி நீங்கள் தமிழ்ப் பார்வையைக் காட்டவேண்டும். தமிழ்ப் பார்வையிலே குளிர்ச்சியும் உண்டு; கோபக்கனலும் உண்டு. தமிழன் தன்னுடைய நாட்டையே அர்ப்பணிப்பான், தோழன் என்று வருபவனுக்கு. தமிழன், தன்னுடைய தாளை மிதித்தவனை அவனுடைய தலை தாளிலே படுகின்ற வரை ஓயமாட்டான் என்பதை நம்முடைய இலக்கியங்களேல்லாம் எடுத்துச் சொல்லுகின்றன.

“எந்த இந்தி மொழியைத் தமிழகத்திலே இன்றையத் தினம் புகுத்தவேண்டும்—திணிக்கவேண்டும்’ புகுத்தலாம்—திணிக்கலாம்; புகுத்திவிட்டோம்—திணித்துவிட்டோம்—என்று எண்ணத்தக்க அளவுக்கு இன்றையத் தினம் வடக்கேயுள்ளவர்கள் இறுமாந்து இருக்கின்றார்களோ, அவர்களெல்லாம் காடுகளிலே சுற்றிக்கொண்டும், குகைகளிலே வாழ்ந்துகொண்டும் மொழியறியாத காரணத்தாலே வாழ்க்கை வழி தெரியாமல் வழுக்கி வீழ்ந்துகொண்டும் இருந்த நேரத்தில்; இங்கே அகத்தையும் புறத்தையும் நம்முடைய பெரும் புலவர்கள் இயற்றினார்கள். முடியுடை மூவேந்தர்கள் இருந்த காலமும், அவர்கள் காலத்திலே இயற்றப்பட்ட பெரும் இலக்கியங்களும், அந்த நாளிலே வடநாட்டிலே ‘வங்காளமானாலும் சரி, பாஞ்சாலமானாலும் சரி, பண்டித ஜவகர்லால் நேருவினுடைய தாயகமாகப் போற்றப்படுகின்ற காஷ்மீரம் ஆனாலும் சரி நான் வடக்கே இருக்கின்ற வரலாற்று ஆசிரியர்களை கேட்கின்றேன்—அந்த ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன்னாலே உங்களுக்கு எது மொழி? உங்களுக்கு எது இலக்கணம்? உங்களுக்கு எது இலக்கியம்? உங்களுடைய மொழி எந்த நாட்டிலே பேசப்பட்டது? ஈராயிரம் ஆண்டுக் காலத்துக்கு முன்னாலே தமிழ் வாணிபன்—தமிழ் வணிகன், ரோம் நாட்டுக்கடை வீதியிலே பேசினானே! ஈராயிரம் ஆண்டுக் காலத்துக்கு முன்னாலே யவனத்திலல்லவா சென்று வியாபாரம் செய்தான்! ஈராயிரம் ஆண்டுக்காலத்துக்கு முன்னாலே உலகத்தோடு தொடர்புகொள்வதற்கு எங்கள் தமிழ் மொழி எங்களுக்குப் போதுமானதாக இருந்ததே.

“ஈராயிரம் ஆண்டுக்காலத்துக்குமுன்னாலே அறவழியிலே எங்கள் இன மக்களை இழுத்துச் செல்வதற்கு எங்கள் தமிழ் மொழி எங்களுக்குப் போதுமானதாக இருந்தது. பாடி வீடானாலும் சரி, பள்ளியறையானாலும் சரி, சாலையானாலும் சரி, சோலையானாலும் சரி, களமானாலும் சரி, எங்கெயும் பயன்பட்டுவந்த இந்தத் தமிழ்மொழி பயன்படாது என்று சொல்லுகின்றவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டும்? அவர்கள் தமிழ் மொழியறியாத காரணத்தால் அப்படி பேசுகிறார்கள் என்று மன்னித்துவிடலாம் என்றாலும், அவர்களே சிற்சில வேளைகளிலே நம்முடைய முகவாய்க்கட்டையைத் தடவிச் சொல்லுகின்றார்கள்.

“தம்பி, தம்பி! தமிழ் மொழியை இழிவாகக் கருதிக்கொள்ளாதே, அது மிக நல்ல மொழி, அழகான மொழி, எனக்குப் பேசத் தெரியாதே தவிர, பேசுவதைக் கேட்டிருக்கிறேன் மிக அழகாக இருக்கின்றது” என்று நம்மிடத்திலே சொல்லிவிட்டு, ‘எங்களுடைய மொழி சிலாக்கியமானது என்று சொல்லவில்லை. எங்களுடைய மொழி இலக்கிய வளமில்லாத மொழிதான். நீங்கள் விரும்பினால் அதை 6 மாதக் காலத்திலே கற்றுக் கொள்ளலாம், ஓராண்டுக் காலத்திலே கற்றுக் கொள்ளலாம். என்றாலும், தமிழ் ஒருபுறத்திலே இருக்கட்டும், இந்தியையும் ஏற்றுக்கொள்ளுங்கள், இந்திக்கு ஆக்கம் தாருங்கள்’—என்று நம்மைப் பார்த்துக் கேட்கின்றார்கள்.

சேலம் தொகுதி தேர்தல் வழக்கு

இரண்டாம் கட்டத்திலும் வெற்றி

காங்கிரசாரின் ‘ரிட்’ மனு உயர் நீதிமன்றத்தில் தள்ளுபடி

சென்னை, செப். 24—

சேலம் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராக நின்று வெற்றி பெற்றுள்ள தோழர் மாரியப்பனின் தேர்தல் செல்லாது என அறிவிக்கக்கோரி தேர்தல் நீதிமன்றத்தில் நமது பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வழக்குத் தொடுத்திருப்பதும், வழக்கு வேலூரில் நடைபெற்று வருவதும் தோழர்கள் அறிந்ததே.

இந்த வழக்கில், போட்டியிலிருந்து விலகிக்கொண்டவர்களில் கடைசி இருவரும், போட்டியிட்டவர்களாகக் கருதப்பட்டு வழக்கில் ஈடுபடுத்தப்படவில்லை என்பதால், வழக்கு முறையற்றது என, தோழர் மாரியப்பன் தேர்தல் நீதிமன்றத்தில் வாதிட்டார். ஆனால் தேர்தல்நீதிமன்றம், மாரியப்பனின் ஆட்சேபத்தை ஏற்காமல் வழக்கு முறையானது என்றே தீர்ப்பு வழங்கிற்று.

இந்தத் தீர்ப்பு சரியானதல்ல என்றுதான், தோழர் மாரியப்பன் உயர் நீதிமன்றத்தில் ‘ரிட்’ மனு தாக்கல் செய்தார்.

தோழர் மாரியப்பனுக்காக வழக்கறிஞர்கள் வி. கே. திருவேங்கடாச்சாரி, எம். என். ரங்காச்சாரி மற்றும் எஸ். சேதுராமன் ஆகியோர் வாதாடினர்.

நமது பொதுச்செயலாளருக்காக வழக்கறிஞர் வி. பி. இராமன் அவர்கள் வாதாடினார்கள்.

இரு சாராரின் வாதங்களையும் கேட்டறிந்த பின்னர், உயர் நீதிமன்ற நீதிபதிகளான பி. இராசகோபாலன், மற்றும் என். இராசகோபால் அய்யங்கார் ஆகியோர் நமது பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் தொடுத்த வழக்கு முறையானது என்றும், தேர்தல் நீதிமன்றத்தின் தீர்ப்பு சரியானதே என்றும் தீர்ப்புக் கூறியுள்ளனர்.

அபேட்சையை வாபஸ் பெறுவதற்குரிய கடைசி தேதிக்குப் பிறகு போட்டியிலிருந்து விலகிக்கொள்கிற அபேட்சகர்களும், போட்டியிடுகிற அபேட்சகர்களாகக் கருதப்படவேண்டும் என்று காங்கிரஸ் தரப்பில் வாதிடப்பட்டது.

விலகிக்கொள்ளுகிற அபேட்சகர்கள் போட்டியிடுகிற அபேட்சகர்களாக முடியாது. விலகிக்கொள்ளுதல் என்பது, காலந்தாழ்ந்து வாபஸ் பெறுதல்தான் என்று நம் சார்பில் வாதிடப்பட்டது.

வழக்கின் முழு விவரங்களையும் விரிவாக ஆராய்ந்து விளக்கியுள்ள நீதிபதிகள் நம் தரப்பு வாதங்களே நியாயமானவை எனக் கண்டு, நமது பொதுச்செயலாளர் தொடுத்துள்ள வழக்கு முறையானது என்று உறுதிசெய்து, தோழர் மாரியப்பன் கொடுத்திருந்த ‘ரிட்’ மனுவைத் தள்ளுபடி செய்து தீர்ப்புக் கூறியுள்ளனர்.

இந்த இரண்டாம் கட்டத்திலும் நமது வழக்கறிஞர் வி. பி. இராமன் அவர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள்.

மறைமலையடிகள் விழா

25—9—57 மாலை 6-30 மணிக்கு சென்னை-பூங்கா நகர் கந்தகோட்ட மெத்தை உற்சவ மண்டபத்தில், மறைமலையடிகள் நினைவு விழா, கொண்டாடப் பெறும்.

திருக்குறள் வகுப்பு

25—9—57 மாலை 6½ மணிக்கு, சென்னை — பெத்துநாய்க்கன் பேட்டை முருகேச முதலித் தெரு 2-ஆம் எண்ணுள்ள கட்டடத்தில் திருக்குறள் வகுப்பு புலவர் கா. சி. தனக்கோட்டி அவர்களால் நடத்தப்பெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.